தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**ஆணை நாள்: 04.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண். SA3831/F/2020**

**திரு V.சுரேந்திரகுமார் ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/ துணை மேலாளர்,**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,**
**தலைமை அலுவலகம்,**
**புதுக்கோட்டை. ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **10.01.2020** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **04.03.2020** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **07.05.2020** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (04.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு V.சுரேந்திரகுமார் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ துணை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தலைமை அலுவலகம், புதுக்கோட்டை ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் **10.01.2020** தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், 31.10.2018 அன்று நடத்துநர் பணியில் ஓய்வு பெற்றும் இதுநாள்வரை பென்சன் ஆர்டர் காப்பி, எத்தனை ஆண்டுகள் (SC) பணிபுரிந்துள்ளேன்

என்பதற்கான சான்றிதழ் விபரம், PF தொகை ரூ.4,61,485 மட்டும் தாமதமாக 24.09.2019 அன்று புதுக்கோட்டை தலைமை அலுவலகத்தில் பெற்றுள்ளதாகவும் அதற்குரிய வட்டிதொகை வழங்காததற்கான காரணம், பணிக்கொடை தொகை, CDSR (SSS) IRT தொகையும் இதுநாள் வரை வழங்காததற்கான காரணம், பென்சன் தொகை ரூ.17,307.00 மட்டும கனரா பேங்க் மூலம் இதுவரை வழங்கப்பட்டு வருகிறது தன்னுடைய முழு பென்சன் தொகை எவ்வளவு என்ற முழு எழுத்துமூல விபரம், 03.09.1983 அன்று மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தில் நடத்துநர் பணிக்கு சேர்ந்துள்ளதாகவும் பென்சன் தொகைக்கு எந்த காலத்தை சேர்க்கப்பட்டுள்ளது, பணிக்கொடை தொகைக்கு எந்த காலத்தை சேர்க்கப்பட்டுள்ளது போன்ற விளக்க விபரம் தொடர்புடைய தகவல்களை வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர்/ நிர்வாக இயக்குநர், பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தலைமை அலுவலகம், கும்பகோணம் கோட்டம் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனு தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 6(3)-ன் கீழ் 14.01.2020 தேதியிட்டு உரிய பொதுத் தகவல் அலுவலரான பொதுத் தகவல் அலுவலர்/ உதவி மேலாளர் (பணியாளர் & சட்டம்) புதுக்கோட்டை மண்டலம், உதவி மேலாளர் (கணக்கு & தணிக்கை) புதுக்கோட்டை மண்டலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், புதுக்கோட்டை அவர்களுக்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 04.03.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ மேலான்மை இயக்குநர், TNSTC, தலைமை அலுவலகம், எண்.27, புகைவண்டி நிலைய புதியசாலை, கும்பகோணம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 07.05.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (04.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தனக்கு ஏதும் வழங்காததால் தான் கோரிய தகவலை தனக்கு பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் 10.01.2020 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத்**

தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

- மேல்முறையீட்டாளர் 10.01.2020 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA3831/F/2020**

**பெறுநர்**

**பொதுத் தகவல் அலுவலர்/ துணை மேலாளர்,**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,**
**தலைமை அலுவலகம்,**
**புதுக்கோட்டை.**

**மனுதாரர்**

**திரு V.சுரேந்திரகுமார்,**
**P.No.127, H.No.8/392, V.A.T.C நகர்,**
**ஆலம்பட்டி ரோடு, நாகமங்கலம் அஞ்சல்,**
**திருச்சி மாவட்டம் - 620 012.**

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-17.11.2020